**12.08.2024 இ.ஏ.எண்.01/2022 இ.பி. எண்.28/2008 ம.சா.1, குணசேகரன் த/பெ. தனபால்**

**குறுக்கு விசாரணை**

என்னோடு பிறந்தவர்கள் பாலு, சிவகாமி, சின்னபையன், நாகம்மாள், புனிதா ஆகியோர் ஆகும். நான் அனைவருக்கும் இளையவர். எனக்கு சுமார் 10 வயது இருக்கும் வரை கூட்டு குடும்பமாக இருந்தோம் பின்னர் அவரவர்க்கு திருமணம் ஆனவுடன் தனித்தனியே சென்றுவிட்டனர். நான் இளவராக இருந்தபோது என் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என் தந்தை பாதுகாப்பாளராக இருந்து கிரயம் வாங்கப்பட்டது. அவ்வாறு என் பெயரில் வாங்கப்பட்ட சொத்தும் கூட்டு குடும்ப சொத்தாக அனுபவிக்கப்பட்டது என்றால் அது சரியல்ல என் அண்ணன்களுக்கு தனித்தனியே சொத்து வாங்கி கொடுக்கப்பட்ட பிறகுதான் என் பெயரில் எனக்கு சொத்து வாங்கப்பட்டது. முத்து ரெட்டியார் என்பவரை எனக்கு தெரியாது. அவரது மகன் ராகவன் என்பவரையும் தெரியாது. மனு சொத்தை பற்றுகை செய்த விவரம் எனக்கு ஆரம்பத்தில் தெரியாது தற்போது ஆளியூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் அறிவிப்பு ஒட்டிய பிறகுதான் அந்த விவரம் தெரியும். நான் சொல்வது தவறு என்றும் இம்மனு நடவடிக்கைகளில் பலமுறை அறிவிப்புகளை நானே பெற்றுள்ளேன் என்றும் எனது அண்ணன் ஏற்படுத்திய அடமானம் என்னை கட்டுப்படுத்தும் என்றும் என் அண்ணன் பெற்ற கடனை ஏமாற்றும் நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. என் பெயரிலுள்ள அசல் கிரய ஆவணம் எதிர் மனுதாரர் தீர்ப்பு பெற்றவரின் வசம் உள்ளது. அடமானக் கடன் பைசல் செய்யப்பட்டால் அசல் ஆவணம் திருப்பி கொடுக்கப்படும் என்றால் நான் கடனே வாங்கவில்லை. நான் தெரிந்தே பற்றுகையை நீக்க நடவடிக்கை எடுக்காமல் இருந்தேன் என்பது சரியல்ல.